DECEMBER 2024 **P/ID 35329/PTL4V**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. வினையியல் - பெயர்க்காரணம் கூறுக.

2. விரவு வினை என்றால் என்ன?

3. இடைச்சொல்லின் இயல்பினைக் குறிப்பிடுக.

4. 'அம்மூன்றென்ப மன்னைச் சொல்லே' - விளக்கம் தருக.

5. ஒப்பில் போலி என்றால் என்ன?

6. வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா ஏன்?

7. இயைபு - பொருள் தருக.

8. இயற்சொல்லின் இயல்பினைச் சுட்டுக.

9. திசைச்சொல் என்றால் என்ன?

10. சுண்ணம் என்பது யாது?

11. சொல்லதிகார இயல்களை வரிசைப்படுத்துக.

12. தொல்காப்பியத்தின் தொன்மையைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே
250 சொற்களில் விடை எழுதுக.

13. உயர்திணை வினைமுற்றுக்களை எடுத்துரைக்க.

14. வினையெச்ச வாய்ப்பாடுகளை விளக்குக.

15. இடைச்சொல்லின் வகைகளை எடுத்தியம்புக.

16. உரிச்சொல்லின் பொதுஇலக்கணத்தைத் தொகுத்துரைக்க.

17. தொகைச் சொற்களின் வகைகளை விளம்புக.

18. அன்மொழித் தொகை என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

19. தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகளை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. வினைசொல்லின் பொதுஇலக்கணத்தை எடுத்துக்கூறி அதன் வகைகளை விவரிக்க.

21. உம் மற்றும் ஓ எனும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை விளக்குக.

22. ஒரு பொருள் உணர்த்தும் உரிச்சொற்களைப் பட்டியலிடுக.

23. பொருள்கோளின் வகைகளை விவரி.

24. தொல்காப்பியரின் மதிநுட்பத்தினைச் சான்றுடன் விவரிக்க.

———————